**பெல்மடுள்ள பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பெல்மடுள்ள பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் பெல்மடுள்ள பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 **கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள் கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறவேண்டிய முதலீட்டு வட்டி ரூபாய்.47,742 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடத்தில் திருத்தப்படும் என்பது. | இது திருத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டின் போது முதலீட்டு கணக்கிற்கு மேற்கொண்ட தவறுதலான வரவு பதிவு ஒன்றினை திருத்துவதற்கு மீண்டும் ஒரு வரவு பதிவு ஒன்றினை வைத்தமையால் முதலீட்டு கணக்கு ரூபாய்.81,134 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடத்தில் கணக்குகளை தயாரிக்கும் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | மேற்படி |
| (இ) | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம் காசு அடிப்படையில் கணக்கு வைத்தல் கணக்கீட்டு கொள்கையாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ள படியாக நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டண கணக்குகளில் ரூபாய்.12,263,588 ஆன நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. | எதிர்வரும் வருடத்தில் கணக்குகளை தயாரிக்கும் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | மேற்படி |
| (ஈ) | ரூபாய்.205,880 தொகையான மூலதன செலவினம் செயற்பாட்டு செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தமயால் செயற்பாட்டு செலவினம் அதிகரித்து மூலதனச் செலவினம் குறைவடைந்திருந்தது. | எதிர்வரும் வருடத்தில் கணக்குகளை தயாரிக்கும் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| (உ) | ரூபாய்.67,557 தொகையான நிலுவை ஊழியர் நலன்புரி நிதியம் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | திரண்ட நிதியத்தில் இருந்து செலுத்துதல் சட்டத்திற்கு அமைவானது என்பது. | மேற்படி |
| (ஊ) | தவறுதலான இரட்டை பதிவு காரணமாக மூலதன ஈட்டத்திற்கான வருமானத்திலான பங்களிப்பு கணக்கு மற்றும் இயந்திர உபகரண கணக்கு ஆகியன ரூபாய்.941,931 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | திருத்துவதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது என்பது. | மேற்படி |
| (எ) | திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட ரூபாய்.1,316,634 தொகைக்கு மற்றும் வரவு வைக்கப்பட்ட ரூபாய்.362,131 தொகைக்கு உரிய எதிர்ப்பதிவுகள் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான சந்தர்ப்பங்கள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | மேற்படி |
| (ஏ) | 04 கணக்கு விடயங்களுக்கு உரிய 2022 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுகளுக்கு அமைவான மீதிகள் மற்றும் பயன்பாட்டு ஆவணங்களின் பிரகாரம் மீதி ஆகியவற்றுக்கு இடையே ரூபாய்.16,807,276 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | இந்த மாற்றம் சில காலமாக நடைமுறையில் உள்ளமை மற்றும் எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது | வேறுபாட்டுக் கான காரணங்கள் இனங்காணப் பட்டு தீர்க்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,539,155 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,019,656 ஆகும்.

### 2.2 நிதி நிர்வாகம்

**வங்கி இணக்கக்கூற்றினை தயாரித்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் வங்கியில் இடப்பட்ட ரூபாய்.29,963 தொகை வங்கி கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. அதனுடன் தொடர்புடைய உத்தியோகத்தரிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே வங்கிக்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபாய்.653,192 | இந்த காலப்பகுதிக்கு உரிய தகவல்கள் காணப்படாமையால் பிரச்சினையை தீர்த்துக் கொள்ள முடியாது உள்ளமை. | துரிதமாக தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

மற்றும் 1999 - 2009 ஆண்டுகளுக்கு இடையே வங்கிக்கு வரவு வைக்கப்பட்டிருந்த ரூபாய்.109,561 தொகையினை இனங்கண்டு தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் கடந்த வருடத்திற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த நிலுவை** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 6,969,060 | 6,898,956 | 8,375,701 | 6,997,407 | 7,077,060 | 6,578,917 | 4,779,073 | 8,440,141 |
| வாடகை | 3,332,640 | 2,578,415 | 2,521,265 | 1,559,859 | 5,251,342 | 3,618,440 | 2,719,782 | 1,758,897 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,041,000 | 1,901,782 | 1,901,782 | - | 1,016,000 | 795,065 | 795,065 | 111,747 |
| ஏனைய வருமானங்கள் | 6,644,000 | 6,871,030 | 6,791,304 | - | 5,468,500 | 8,048,513 | 8,091,495 | - |
| | 17,986,700 | 18,250,183 | 19,590,052 | 8,557,266 | 18,812,902 | 19,040,935 | 16,385,415 | 10,310,785 |

### 2.3.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 வருடங்களை விட பழமையான ரூபாய்.141,879 தொகையான நிலுவை வீதவரி மீதியும் ரூபாய்.91,847 தொகையான நிலுவை ஏக்கர் வரி மீதியும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக காணப்பட்டது. அவ்வாறே 06 நிறுவனங்களினால் சுற்றாடல் அனுமதி பத்திரத்தினை பெற்றுக் கொள்ளாமையால் மீளாய்வாண்டில் ரூபாய்.47,700 ஆன வருமானம் இழக்கப்பட்டு இருந்தது. | வீதவரி செலுத்தாதவர்களின் ஆதனங்களை இரத்து செய்வதாக மற்றும் ஏக்கர் வரி அறவிடுவதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றமை. அறிவுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அனுமதி பத்திரங்களை பெற்றுக்கொள்ள உரிய தகவல்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் சேகரிக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 - 2022 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் கூலி அடிப்படையிலான 06 ஊழியர்களுக்கு நலன்புரி நிதியை பங்களிப்பு செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலுவை பணத்தை அறவிட்டு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் நலன்புரி நிதிய அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | திண்மக்கழிவினை தயாரிப்பதற்காக 2022 ஆகஸ்ட் மாதத்தில் கிடைக்கப்பெற்ற பேலர் இயந்திரம் ஒன்று இரட்டை வட மின் விநியோகம் இல்லாதிருந்த காரணத்தால் கிடைத்த திகதி முதல் பயன்பாடற்று காணப்பட்டது. | நிதி ஏற்பாட்டினை மேற்கொண்டு இயந்திரத்தினை பயன்படுத்துவதற்கு உரிய வசதிகள் மேற்கொள்ளப்படும் என்பது. | இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2018 உள்ளூராட்சி தேர்தலில் தெரிவாகிய 32 அங்கத்தவர்களில் 2022 நவம்பர் மாதம் வரையிலும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்றினை வழங்குமாறு அனைத்து அங்கத்தவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளமை. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்துதல் சட்டத்திற்கு அமைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | 19 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபாய்.151,255 கடன் மீதி ஒன்று நிலவியது. | பிணையாளர்களிடமிருந்து 04 மீதிகள் அறவிடப்படுகின்றது. ரூபாய்.140,632 தொகையினை பதிவழிப்பதற்கு ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விடய பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரமின்றி பல்மடுள்ள வாரச்சந்தையின் அருகாமையில் உள்ள காணி ஒன்றினை பெற்றுக்கொண்ட குத்தகையாளரால் 2006 ஆம் ஆண்டு முதல் தள வாடகை செலுத்தப்படாமை, உடன்படிக்கைக்கு முரணாக அதனை இடை குத்தகைக்கு வழங்கியிருந்தமை, வழங்கிய காணியை விட அதிக பரப்பளவான காணியை பயன்படுத்துகின்றமை, அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திற்கு முரணாக பாரியதொரு கட்டிடத்தினை நிர்மாணித்திருந்த போதிலும் அவை எவற்றுக்கும் எதிராக சபையினால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது அங்கிருந்து அகலுமாறு அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளமை. | உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீறியமைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு உரித்தற்ற 05 வாகனங்களின் உரித்தினை கையேப்பதற்கு அல்லது மீளக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கிய வாகனங்களின் உரித்தினை சுவீகரிக்கும் நிகழ்ச்சி திட்டம் ஒன்று எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் என்பது. | 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமை சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |